## பற்களுக்கு ஏற்படும் காயங்களைத் தடுப்போம்

- கிரிக்கட், ரக்பி, குத்துசண்டை போன்ற முகத்திற்குக் காயம் ஏற்படுத்தக்கூடிய விளையாட்டுக்களில் ஈடுபடும்போது பாதுகாப்பான தலைக்கவசத்தையும், வாய்க்கான பாதுகாப்பையும் அணிந்து கொள்வோம்
- மோட்டார் சைக்கிள்களை ஓட்டும் போது பொருத்தமான தலைக்கவசத்தை அணிந்து கொள்வோம்
- வாகனங்களில் பயணிக்கும் போது பாதுகாப்பான ஆசனப்பட்டியை அணிந்து கொள்வோம்.
- பாடசாலை, வீடு மற்றும் விளையாட்டு மைதானங்களில் ஏற்படக்கூடிய விபத்துக்களைப் பற்றித் தெரிந்து வைத்துக் கொள்வோம்.



**பற்களில் ஒரு சிறிய பாதிப்போ அல்லது உடைவோ ஏற்படினும் பல் வைத்தியரின் ஆலோசனையை நாடுவோம்.**

சுகாதார தகவல்களுக்கு அழையுங்கள
**0710 107 107**
இணையத்தளம - **www.suwasariya.gov.lk**

## தெரிந்து கொள்வோம்

- முகம் பார்க்கும் கண்ணாடியில் எமது பற்களை மாதத்தில் ஒரு முறையாவது பரிசோதித்துக் கொள்வோம்
- வருடத்தில் ஒரு முறையாவது எமது பற்களை பல்வைத்தியரிடமோ அல்லது பாடசாலை பற்சிகிச்சையாளரிடமோ காட்டி, பரிசோதித்துக் கொள்வோம்

## பற்கள் சம்பந்தமான நோய்களை ஆரம்ப நிலையிலேயே இனம் கண்டு கொள்வோம்

- வெள்ளை, மஞ்சள், கபிலநிறம் மற்றும் கறுப்புநிற புள்ளிகள் பற்களில் தோன்றுதல்
- பற்களை துலக்கும்போது இரத்தக்கசிவு ஏற்படுதல்
- பற்கள் ஒழுங்கின்றி இருத்தல்
- பற்கூச்சம் இருத்தல், பற்களுக்கிடையில் உணவுப் பதார்த்தம் தேங்குதல்
- வாயின் உட்புறத்தில் எந்தப் பகுதியிலேனும் சிவப்பு நிற அல்லது வெள்ளை நிற வளர்ச்சியோ, புண்ணோ, கட்டியே ஏற்படுதல்

**மேற்கூறிய எந்த ஒரு அறிகுறி இருப்பினும் உடனடியாக பல் மருத்துவ உதவியை நாடவும்**



## பற்கள் சம்பந்தப்பட்ட ஆலோசனைகளுக்கும் சிகிச்சைகளுக்கும்

வைத்தியசாலையில் உள்ள பற்சிகிச்சை நிலையத்தையோ, பாடசாலை பற்சுகாதார நிலையத்தையோ, தகுதி வாய்ந்த பல் வைத்தியரையோ நாடுவோம்.

# முத்துப்போல் வெண்பற்களும் அழகிய சிரிப்பும்



சுகாதார அமைச்சு
சுகாதார மேம்பாட்டுப் பணியகம்